செ.வெ.எண் 33 நாள்: 12.07.2018

# பெரம்பலூர் மாவட்டம்

## பிளாஸ்டிக் ஒழிப்பிற்கு அரசு அலுவலகங்கள் முன்மாதிரியாக திகழவேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் பேச்சு.

அதன் விவரம் வருமாறு:

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி 110ன் மூலம் தமிழகத்தில் 2019 ஆம் ஆண்டு ஜனவரி 1ம் தேதி முதல் பிளாஸ்டிக் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள். அதனைத்தொடர்ந்து அனைத்து அரசு அலுவலகங்களிலும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டை தடுக்கும் வகையில் பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக பெரம்பலூர் மாவட்டத்தில் ஜூலை 15ஆம் தேதி முதல் அனைத்து அரசு அலுவலகங்களிலும் ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் விரிப்புகள், உணவு பொருட்களை எடுத்து செல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் கைப்பைகள், தட்டுகள் மற்றும் தண்ணீர் பாக்கெட்டுகள் ஆகியவற்றை முற்றிலும் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. அதனையொட்டி இத்திட்டத்தின் அவசியம் குறித்து பொதுமக்களிடம் தேவையான விழிப்புணர்வு ஏற்படுத்தவும், பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டை தடை செய்ய மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (12.07.2018) மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விதி எண் 110-ன் கீழ் தமிழகத்தில் 2019ஆம் ஆண்டு முதல் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்துவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்கள். அதனைத்தொடர்ந்து பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களிலும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை குறைக்கும் வகையிலும், அதற்கு பதிலாக மாற்றப் பொருட்களை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலும், தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், இம்மாத இறுதியில் நடைபெற உள்ள பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினை குறைத்தல் தொடர்பான பயிற்சிப் பட்டறை வகுப்பில் ஒவ்வொரு அரசு அலுவலகங்களும் பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைப்பதற்கான நடைமுறை சாத்தியங்கள் குறித்தும், மாற்றுப் பொருட்கள் பயன்பாடுகள் குறித்தும், அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். மேலும், இத்திட்டத்தினை பெரம்பலூர் மாவட்டத்தில் முழுமையாக அமுல்படுத்த அரசு அலுவலர்களும், பொதுமக்களும் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதற்கான அறிவிப்பை அனைத்து அலுவலகங்களிலும் மக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். இதன்மூலம் அரசு அலுவலகங்கள் பிளாஸ்டிக் ஒழிப்பில் பொதுமக்களுக்கு முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆ.அழகிரிசாமி, திட்ட இயக்குநர் திரு.ஸ்ரீதர், வருவாய் கோட்டாட்சியர் திரு.விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சேதுராமன், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு.சசிகலா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.தங்கவேல் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.